வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணக்குமார்

தேதி 30.06.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் புதன் கிழமை முதல், கானா, டிரினிடாட் - டொபாகோ, அர்ஜெண்டினா, பிரேசில், நமீபியா ஆகிய 5 நாடுகளுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

டிஜிட்டல் இண்டியா முன்முயற்சிகளால், சராசரி இந்தியரின் சுய மதிப்பீடும், இந்தியாவை பற்றிய உலகின் பார்வையும் மாறியிருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

உழவர்கரை நகராட்சி பகுதியில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சி திட்டங்களை, துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர், இன்று, மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தனர்.

கல்வித் துறையின் புதிய பகுப்பாய்வு இணையதளத்தை முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

## மோடி வெளிநாடு (11)

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் புதன் கிழமை முதல், கானா, டிரினிடாட்-டொபாகோ, அர்ஜெண்டினா, பிரேசில், நமீபியா ஆகிய 5 நாடுகளுக்கு பயணம் மேற்கொள்கிறார். வெளியுறவு அமைச்சகத்தின்

பொருளாதார உறவுகள் துறை செயலர் திரு தம்மு ரவி, இன்று புதுடெல்லியில் சிறப்பு செய்தியாளர் கூட்டம் ஒன்றில் இதை தெரிவித்தார். 5 நாடுகள் பயணத்தின் முதல் கட்டமாக பிரதமர், வரும் 2 மற்றும் 3 ஆகிய தேதிகளில் கானா செல்ல இருப்பதாகவும், கானாவில் அந்நாட்டு அதிபரை பிரதமர் சந்தித்து, பொருளாதாரம், எரிசக்தி, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவுகளை மறு ஆய்வு செய்வார் என்றும் அவர் கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடி கானாவிற்கு இருதரப்பு பயணம் மேற்கொள்வது இதுவே முதன் முறை என்பதும் குறிப்பிடத் தக்கது.

*பிரதமர் – எஃகு* (12)

இந்தியாவின் எஃகு துறை, புதுமையாக்கம் மற்றும் கொள்கை ரீதியிலான ஊக்குவிப்பு மூலம், உலகின் முன்னணி நிலைக்கு உயர்ந்து வருவது குறித்து, மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு எச் டி குமாரசாமி எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். உள்கட்டமைப்பு முதல், பாதுகாப்பு வரையிலும், மின்சார வாகனங்கள் முதல் தூய எரிசக்தி வரையிலும், வளரும் இந்தியாவின் முதுகெலும்பாகவே எஃகு துறை திகழ்வதாக,பிரதமர் தெரிவித்துள்ளார். எஃகு துறைக்கான உற்பத்தியுடன் இணைந்த ஊக்குவிப்பு திட்டம், உள்நாட்டு இரும்பு மற்றும் எஃகு

உற்பத்திக் கொள்கை போன்ற அரசின் பல்வேறு சீர்திருத்தங்களால், இந்திய எஃகு துறையில், உற்பத்தி திறன், சுயசார்பு மற்றும் புதுமையாக்க முயற்சிகள் அதிகரித்து இருப்பதாக, அமைச்சர் திரு குமாரசாமி தமது கட்டுரையில் கூறியுள்ளார்.

*ஜிதேந்திர சிங்-புதுச்சேரி* 1 (17)

டிஜிட்டல் இண்டியா முன்முயற்சிகள் மூலமான மத்திய அரசின் தொழில்நுட்பத் தலையீடுகளால், சராசரி இந்தியரின் சுய மதிப்பீடும், இந்தியாவை பற்றிய உலகின் பார்வையும் மாறியிருப்பதாக, மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, இந்திய பொது நிர்வாக கழகத்தின் தென் மண்டல மாநாட்டை, அவர் தொடக்கி வைத்து பேசுகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலமான பல்வேறு முன்முயற்சிகள் மூலம், ஆளுகையின் எல்லைகளை நீட்டித்து, மக்கள் தங்களின் நிலையைத் தாங்களே நிர்ணயித்து கொள்ளும் அதிகாரத்தை வழங்கி இருப்பதாகக் கூறினார்.

நேரடி ரொக்க மானியம், டிஜி-லாக்கர், உமங் செயலி, பாரத் நெட், ஜன்தன் போன்ற திட்டங்களால், கணிசமான அளவில் சமூக பொருளாதார தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். ஒரே நாடு – ஒரே சந்தா திட்டத்தினால், தகவல்களை பெறும் உரிமை ஜனநாயக மயமாகி இருப்பதாக அவர் குறிப்பிட்டார். பிரதமரின் விஷ்வகர்மா போன்ற திட்டங்களால் பாரம்பரிய மரபுகளை பாதுகாக்கும் அதே வேளை,

*ஜிதேந்திர சிங்-புதுச்சேரி* 2 (8)

இத்தகைய முயற்சிகளில் தொழில்நுட்பங்களின் பயன்பாடும் அதிகரித்து இருப்பதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில், இதுவரை பயன்பாட்டிற்கு வராத இயற்கை ஆதாரங்களை கண்டுபிடித்துப் பயன்படுத்துவதும், அரசுத் துறை – பொதுத் துறைக்கு இடையிலான ஒருங்கிணைப்பை மேம்படுத்தி உலகத்தரத்திற்கு உயர்வதும், விக்சித் பாரத் இலக்குகளை எட்டுவதில் முக்கிய அம்சங்களாக இருக்கும் என்றும், அவர் கூறினார்.

மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் உரையில் இருந்து ஒரு பகுதி .....

(வாய்ஸ்- ஜிதேந்திர சிங்)

*ஜிதேந்திர சிங்-புதுச்சேரி* 3 (8)

புதுச்சேரி பல்கலைக்கழக மாநாட்டுக் கூடத்தில் நடைபெற்ற இவ்விழாவின் போது, பல்கலைக்கழக ஆளுகை மன்றத்தையும் அமைச்சர் தொடக்கி வைத்து, இந்தியாவில் டிஜிட்டல் ஆளுகை என்னும் நூலையும் வெளியிட்டார். புதுச்சேரி அரசின் தலைமை செயலர் டாக்டர் சரத் சவுகான், பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர். பிரகாஷ்பாபு, இந்திய பொது நிர்வாக கழகத்தின் தலைமை இயக்குநர் திரு சுரேந்திர நாத் திரிபாதி, இக்கழகத்தின் புதுச்சேரி கிளை தலைவர் டாக்டர் தனபால் உட்பட பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

*ஜிதேந்திர சிங் சந்திப்பு* (16)

மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், இன்று புதுச்சேரி ராஜ்நிவாசில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனை சந்தித்து, புதுச்சேரியில் கடல் அரிப்பை தடுக்கும் வகையில், கடலோர தூய்மை மற்றும் கடலோரப் பகுதி மேலாண்மைக்கான நிரந்தர அமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்தும், ஆழ்கடல் இயக்கத்தின் கீழ், ஆழ்கடல் மீன் பிடிப்பை ஊக்குவிப்பது குறித்தும் விவாதித்தார். இதற்கு தேவையான எல்லா உதவிகளையும்

மத்திய புவி அறிவியல் துறை அமைச்சகம் புதுச்சேரி அரசுக்கு வழங்கும் என அவர் உறுதி அளித்தார். கடல் படுகையில் புதிய கனிம வள ஆதாரங்களை தேடி கண்டுபிடிப்பதன் மூலம், நாட்டின் தொழில்நுட்ப வல்லமையை மேம்படுத்தவும், உலக அளவிலான கடல் சார் பொருளாதாரத்தில் இந்தியாவின் நிலையை உயர்த்தவும் ஏதுவாகும் என்று அமைச்சர் கூறினார். இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி திட்டங்களுக்கும், பெருங்கடல் ஆராய்ச்சி திட்டங்களுக்கும் இடையில் ஏற்கனவே நிலவும் ஒருங்கிணைப்பை புதுச்சேரி போன்ற கடலோர யூனியன் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்களுக்கு நீட்டிப்பதால், விக்சித் பாரத் இலக்குகளை எட்ட மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

***புதுச்சேரி-ஸ்மார்ட் நகரம்*** 1(12)

நகரங்களில், புதுமையாக்கம், ஒருங்கிணைப்பு மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான முதலீடுகளை அதிகரிக்கும் வகையில் ஸ்மார்ட் சிட்டி இயக்கத்தின் ஒரு பகுதியாக மத்திய அரசு செயல்படுத்தி வரும் CITIIS திட்டத்தின் கீழ், உழவர்கரை நகராட்சிக்கு உட்பட்ட பல்வேறு இடங்களில், மொத்தம் 18.49 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள வளர்ச்சி திட்டங்களை, இன்று துணை நிலை ஆளுநர்

திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர், மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தனர். ஜவகர்நகர்-நடேசன் நகர் பூங்காவில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு ரங்கசாமி பேசுகையில், அரசு மேற்கொண்ட பணிகள் காரணமாக புதுச்சேரியில் ரெயின்போ நகர் உள்ளிட்ட இடங்களில் தற்போது மழை நீர் தேங்குவதில்லை என்றார். முதலமைச்சர் உரையில் இருந்து ஒரு பகுதி......

(வாய்ஸ் - ரங்கசாமி)

***புதுச்சேரி-ஸ்மார்ட் நகரம்*** 2 (4)

சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு சிவசங்கர், உள்ளாட்சித்துறை இயக்குநர் திரு சக்திவேல், உழவர்கரை நகராட்சி ஆணையர் திரு சுரேஷ்ராஜ் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

***புதுச்சேரி இணையதளம்*** (16)

புதுச்சேரியில் அனைத்து பள்ளிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர வசதிகள் பற்றிய எல்லா தகவல்களும் அடங்கிய தரவு தளமாக, கல்வித்துறை சார்பில் நிறுவப்பட்டுள்ள வித்யா சமிக்ஷா கேந்திரா

என்னும் இணையதள வசதியை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று தொடக்கி வைத்தார். முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமையில், கல்வித்துறை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம், கல்வித் துறை செயலர் திருமதி பிரியதர்ஷிணி, மாநில சமக்ர சிக்ஷா திட்ட இயக்குநர் திருமதி எழில் கல்பனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தேசிய கல்விக் கொள்கை அடிப்படையில் உருவாக்கப் பட்டுள்ள, வித்யா சமிக்ஷா கேந்திரா பகுப்பாய்வு தளத்தினால், மாணவர் வருகை, ஆசிரியர் செயல் திறன் உட்பட, பள்ளிகளின் பல்வேறு செயல்பாடுகளை நேரடியாக கண்காணிக்கவும், ஆதாரபூர்வமான முடிவுகளை மேற்கொள்ளவும், கல்வி கட்டமைப்பில், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வை அதிகரிக்கவும் ஏதுவாகும் என அரசு செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

***புதுச்சேரி சான்றிதழ்***(10)

புதுச்சேரி அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை, விவசாயிகளுக்கான ஆன் லைன் சேவைகளை வெளிப்படையான முறையில் செயல்படுத்தியும், செயல்பாடுகளில் பல்வேறு கட்டுப்பாடுகளை

புகுத்தியும், இந்திய தர நிர்ணய அமைவனத்தின் ISO லஞ்ச எதிர்ப்பு மேலாண்மை சான்றிதழ் பெற்றுள்ளது. வேளாண் துறை செயலர் திரு நெடுஞ்செழியன் இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமியை அவரது அலுவலகத்தில் சந்தித்து, இந்த ISO உரிமத்தை வழங்கினார். நாட்டிலேயே, ISO லஞ்ச எதிர்ப்பு மேலாண்மை அமைப்பாக உரிமம் பெற்றுள்ள முதலாவது அரசுத் துறை, புதுச்சேரி அரசின் வேளாண்துறைதான் என்பதும் குறிப்பிடத் தக்கது.

***புதுச்சேரி-ஹஜ்*** (5)

புதுச்சேரி, காரைக்கால், மாகே, ஏனாம் பகுதிகளை சேர்ந்த 90 இஸ்லாமியர்கள் ஹஜ் பயணம் மேற்கொள்ள, முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்து மொத்தம் 14 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப் பட்டுள்ளது. இதற்கான காசோலையை முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று மாநில ஹஜ் கமிட்டி உறுப்பினர் திரு நிசார் அகமதுவிடம் வழங்கினார்.

***சோனோவால்*** (13)

இந்தியாவிற்கு வந்து செல்லும் சொகுசு கப்பல்களின் எண்ணிக்கை கடந்த 11 ஆண்டுகளில், 102 ல் இருந்து, 14 ஆயிரத்து 272 ஆக அதிகரித்து

இருப்பதாகவும், கொள்கை, சட்டம், வரி மற்றும் உள்கட்டமைப்பு ரீதியில் அரசு அமல்படுத்திய பல்வேறு முன் முயற்சிகளே இதற்கு காரணம் என்றும், மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார். சொகுசு கப்பல் போக்குவரத்து தொடர்பாக, சென்னையில் இன்று நடைபெற்ற, முதலாவது ஆசியான்-இந்தியா பேச்சுவார்த்தை மாநாட்டின் தொடக்க விழாவில் பேசுகையில் அவர் இதை தெரிவித்தார். சொகுசு கப்பல் சுற்றுலாவை ஊக்குவிப்பதால், நவீன உலகை, பழங்கால கலாச்சாரத்துடன் ஒருங்கிணைக்க ஏதுவாகும் என்று அமைச்சர் தெரிவித்தார். தமிழகத்திற்கும், சீனா, எகிப்து, தென்கிழக்கு ஆசிய நாடுகள், மற்றும், ஐரோப்பாவின் சில பகுதிகளுக்கும் இடையில், பழங்காலத்திலேயே கடல் வழித் தொடர்புகள் இருந்ததை அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

***தெலங்கானா*** (11)

தெலங்கானா மாநிலம் சங்காரெட்டியில் இன்று தொழிற்சாலைத் தீ விபத்தில் பல உயிர்கள் பலியானது குறித்து குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் துயரம் வெளியிட்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எல்லா உதவிகளும் வழங்கப்படும் என்றும், காயமடைந்தவர்கள் விரைவில் குணம்

பெற தாம் வேண்டுவதாகவும், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார். தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு, பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து தலா 2 லட்ச ரூபாய் கருணைத் தொகை வழங்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார். காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் உதவி அறிவிக்கப் பட்டுள்ளது.